இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 252 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – சித்திரை 09 – சனிக்கிழமை 22 ஏப்ரல் 2023 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 252 : Thiruvalluvar Year - 2054 - Chithirai 09 - Saturday 22 April 2023 - Dak 16 Pages ₹ 5.00

## முதலீட்டாளர்கள் பெரிதும் விரும்பும்

# அமைதிப் பூங்கா - தமிழ்நாடு!

## சட்டப்பேரவையில் - காவல்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.4.2023) சட்டப்பேரவையில், 2023–2024 ஆம் ஆண்டிற்கான காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு பின் பதிலளித்து உரையாற்றினார்.

**சென்னை, ஏப். 22 -**

**சட்டப்பேரவையில் நேற்று, காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றிய முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், “முதலீட்டாளர்கள் பெரிதும் விரும்பும் அமைதிப் பூங்காவாக தமிழ்நாடு விளங்குகிறது” எனப் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

பேரவைத் தலைவர் அவர்களே!

நான், முதல் அமைச்சர்! ஆனால், என்னுடைய துறையான உள்துறையின் மீதான மானியக் கோரிக்கைதான் அனைத்துத் துறைகளிலும் கடைசியாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இது ஏன் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும். அனைத்துத் துறைகளும் உங்கள் துறைதானே என்று நீங்கள் நினைப்பதால்தான், அப்படி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு முதலில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி அவர்கள், தனது துறையின் சார்பில் நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதிலளித்துப் பேசியபோது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பேசிய ஒன்றைச் சுட்டிக் காட்டினார். பேரறிஞர் அண்ணாவின் அமைச்சரவையில் இருந்த அமைச்சர்களின் ஒவ்வொரு துறையையும் குறிப்பிட்ட தலைவர் கலைஞர் அவர்கள், நாம் வகிக்கக்கூடிய துறைகள் வேறுபட்டிருந்தாலும் நாம் அனைவரும் ‘அண்ணாத்துரை’யைச் சேர்ந்தவர்கள் என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாக இங்கே எடுத்துச் சொன்னார். உண்மைதான்,

### இந்த அய்யாதுரையின் இரத்த நாளங்கள் தான்!

எனக்கு தலைவர் கலைஞர் முதலில் வைக்க நினைத்த பெயர் என்னவென்றால், அய்யாத்துரை! எனவே, அமைச்சர்கள் அனைவரும் தனித்தனி துறையை வகித்தாலும் நீங்கள் அனைவரும் இந்த அய்யாதுரையின் இரத்த நாளங்கள்தான்.

இது ஏப்ரல் 2023; 2 ஆண்டுகளுக்கு முன்னால் இதே ஏப்ரல் மாதத்தில்தான் தமிழ்நாட்டு மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் அமர்த்துவதற்கு முடிவெடுத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், வீழ்ந்து கிடக்கும் தமிழ்நாடு எழுச்சி பெறும்; “தாழ்ந்த தமிழ்நாடு தலைநிமிரும்” என்று மக்கள் முடிவெடுத்தார்கள்! மே 7ஆம் நாள், “முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்!” என்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டேன்.

### இனி தமிழ்நாட்டை நிரந்தரமாக தி.மு.கழகம்தான் ஆளும்!

இன்னும் இரண்டு வார காலத்தில், இரண்டு ஆண்டுகாலம் நிறைவடைந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்க இருக்கிறது. இனி தமிழ்நாட்டை நிரந்தரமாக திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆளவேண்டும் என்று மக்கள் மன நிறைவுடன் முடிவெடுக்கும் வகையில் இந்த இரண்டாண்டு காலமாக நாம் ஆட்சியை ஆட்சி நடத்தி வருகிறோம் என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை.

மிக மோசமான நிதி நெருக்கடி, நிதி மேலாண்மையில் ஒன்றிய அரசின் உதவியின்மை ஆகிய மிகக் கடினமான சூழல்கள் உள்ள போதிலும், மகத்தான சாதனைகளை கழக அரசு நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் செய்து கொடுத்துள்ளது. தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வகையில் தமிழ்நாடு அரசு நன்மை செய்து கொண்டிருக்கிறது என்பதை என்னால் தலைநிமிர்ந்து சொல்ல முடியும்!

மகளிர்க்கு பேருந்துகளில் கட்டணமில்லா பயண வசதி செய்து தரப்பட்டதன் மூலமாக, இதுவரை 265 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள்.

### 1 கோடி மகளிருக்கு மாதம் தோறும் 1000 ரூபாய்!

குடும்பத் தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையை செப்டம்பர் மாதம் முதல் தரவிருக்கிறோம். இதன் மூலம் ஒரு கோடி மகளிர், மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் பெறப் போகிறார்கள்.

பல்வேறு மாவட்டங்களில் நான் கலந்து கொண்ட நலத்திட்ட உதவி விழாக்களின் மூலமாக மட்டும் ஒரு கோடிப் பேருக்கு பல்வேறு உதவிகள் செய்யப்பட்டுள்ளன.




திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது 62 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த வருவாய் பற்றாக்குறையை, நடப்பு மதிப்பீடுகளில் 30 ஆயிரம் கோடி ரூபாயாகக் குறைத்துள்ளோம்.

தமிழ்நாட்டை நோக்கி 2 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான புதிய தொழில் முதலீடுகளை நாம் ஈர்த்துள்ளோம்.

மாநில உள்நாட்டு உற்பத்தி 6.11 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

வேளாண் உற்பத்தி அதிகமாயிருக்கிறது. பாசனப் பரப்பும் அதிகமாகியிருக்கிறது.

### துறை ரீதியான சாதனைகளை நெஞ்சை நிமிர்த்திச் சொல்வோம்!

இப்படித் துறைவாரியாக நான் சொல்லத் தேவையில்லை. அனைத்து அமைச்சர்களும் அவற்றை இதே அவையில், விரிவாக ஆதாரங்களோடு சொல்லி இருக்கிறார்கள்.

இப்படி துறைரீதியாகச் சாதனைகளை நெஞ்சை நிமிர்த்திச் சொல்லும் திராவிட மாடல் அரசாக நமது அரசு அமைந்துள்ளது.

உதயசூரியன் உதிப்பதற்கு முன்னால் எழுந்து உழவுக்குச் செல்லும் உழவர்களின் முகத்தில் மலர்ச்சி இருக்கிறது; காரணம், இலவச மின்சாரம் கிடைக்கிறது.

காலை நேரத்தில் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் முகத்தில் மலர்ச்சி காணப்படுகிறது, காரணம், பள்ளியிலேயே காலை உணவு கிடைக்கிறது.

பல்வேறு பணிகளுக்காக புறப்படும் மகளிர் முகத்தில் மலர்ச்சி காணப்படுகிறது - காரணம் பேருந்துகளில் கட்டணமில்லை.

இப்படி மக்களுக்கு நேரடியாக தினமும் பலன் தரும் அரசாக தமிழ்நாடு அரசு இருக்கிறது. அதனால்தான் அவதூறுகளை யார் அள்ளி வீசினாலும், திசைதிருப்பும் திருகுவேலைகளை யார் செய்தாலும், மக்கள் மனங்களை யாராலும் மாற்ற முடியவில்லை; ஏமாற்றவும் முடியவில்லை! நாங்கள் தேர்தலில் மட்டும் வெல்லவில்லை; மக்களின் மனங்களையும் வென்று, அவர்கள் நெஞ்சங்களில் நிரந்தரமாகக் குடியேறி இருக்கிறோம்.

பேரவைத் தலைவர் அவர்களே!

இது தனிப்பட்ட ஸ்டாலினின் அரசு அல்ல; இது திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தனிப்பட்ட கட்சியின் அரசு அல்ல; ஒரு இனத்தின் அரசாக, எட்டுக் கோடி மக்களின் அரசாக, ஒரு கொள்கையின் அரசாக இருக்கிறது; திராவிட மாடல் என்ற கோட்பாட்டின் அரசாக இருக்கிறது. சமூகநீதி, சமத்துவம், சமதர்மம், சகோதரத்துவம், மொழி, உரிமை, இன உரிமை, மாநில சுயாட்சி ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய ‘திராவிடவியல் கோட்பாடு’ என்பதே திராவிட மாடல் சாசனம்.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற அய்யன் வள்ளுவர் நெறியும்,

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற கணியன் பூங்குன்றனாரின் வாக்கும் –

திராவிட இயக்கத்தின் தீரர்களாம் சர். பிட்டி தியாகராயரும், டி.எம். நாயரும் நடேசனாரும் காட்டிய வழியும்,

தந்தை பெரியாரின் சுயமரியாதைச் சமதர்மமும்,–

பேரறிஞர் அண்ணாவின் தமிழ்நாடு உரிமை முழக்கங்களும் –

தமிழினத் தலைவர் கலைஞரின் ஒடுக்கப்பட்டோர் சமூகநீதிச் செயல்பாடுகளும்,

இனமானப் பேராசிரியரின் மொழி, இன உரிமை வழிகாட்டுதல்களும் என்னுள் இருந்து இயக்கிக் கொண்டு இருக்கிறது.

இவைதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய சாதனைக்கும், கம்பீரத்துக்கும், வெற்றிக்கும், துணிச்சலுக்கும் காரணங்கள்!

### மக்கள் நலன்! கொள்கை உரத்தை முன்னெடுக்கும் ஆட்சி இது!

ஓர் அரசு மக்கள் நல அரசாகவும் இருக்க வேண்டும், அதே நேரத்தில் கொள்கை அரசாகவும் இருக்க வேண்டும். மக்களுக்கான உதவிகளை மட்டும் செய்துவிட்டு, கோட்பாடுகளில் இருந்து விலகிச் சென்று விடக் கூடாது. ஒரு பக்கம் மக்கள் நலன், இன்னொரு பக்கம் கொள்கை உரம். இவை இரண்டையும் முன்னெடுக்கும் ஆட்சியாக இரண்டாண்டுகளை நாம் நிறைவு செய்யப்போகிறோம்.

இது இந்தியாவையே ஈர்க்கும் ஆட்சியாக அமைந்துள்ளது என்பது, என்னுடைய பெருமை மட்டுமல்ல; இந்த அமைச்சரவையின் பெருமை! ஏன், எங்களோடு தோளோடு தோள் சேர்த்து நிற்கும் கூட்டணிக் கட்சிகளுடைய பெருமை! இன்னும் சொல்லப்போனால்,

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்

---

# இஸ்லாமியர் வாழ்வில் நலம் நிறைந்து இனிமை பெருகட்டும்!

## ரமலான் திருநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஏப். 22-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ரமலான் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-**

மனிதநேயம் போற்றும் ரமலான் திருநாளைக் கொண்டாடும் அன்பிற்குரிய இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துகளை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

அன்பை, அடக்க உணர்வை, எளிமையை போதித்த அண்ணல் நபிகள் பெருமான், “அண்டை வீட்டுக்காரன் பசியோடு இருக்கும்போது நீ மட்டும் சாப்பிடாதே; உன் உழைப்பில் கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியை ஏழைகளுக்குக் கொடு” என போதித்து, மானுடம் அனைத்தும் பேரன்பால் பிணைக்கப்பட வேண்டியது என்பதை எடுத்துக் காட்டியவர். சமத்துவம், சகோதரத்துவம் என்ற உன்னத லட்சியங்களை உலகத்திற்கு தனது ஈகையாக வழங்கிச் சென்றவர்.

திராவிட முன்னேற்றக் கழகமும், நமது திராவிட மாடல் அரசும் நபிகள் பெருமகனார் காட்டிய சமத்துவ சமுதாயம் அமைக்கும் பணியில் சமரசமின்றித் தனது பயணத்தை தொடருகிறது; என்றென்றும் தொடரும்!

நபிகள் பெருமகனார் போதித்த நெறி வழி நின்று, நோன்புக் கடமைகளை நிறைவேற்றி முடித்துள்ள மன நிறைவோடு, ரமலான் திருநாளைக் கொண்டாடும் அன்பிற்குரிய இஸ்லாமிய சமூகத்தினர் அனைவருக்கும் எனது உள்ளம் நிறைந்த ரமலான் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இஸ்லாமியப் பெருமக்களின் வாழ்வில் என்றென்றும் இன்பமும், நலமும் நிறைந்து இனிமை பெருகட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## தேசிய குடிமைப் பணிகள் நாளில்

# குடிமைப் பணியாளர்களுக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஏப். 22–

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேசிய குடிமைப் பணிகள் தினத்தையொட்டி, வாழ்த்துச் செய்தி ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளார். அதில் குடிமைப் பணியாளர் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துக் கொண்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

நமது பொது நிருவாகத்தில் மிக முக்கியப் பங்காற்றும் குடிமைப் பணியாளர்கள் அனைவருக்கும் தேசிய குடிமைப் பணிகள் நாளில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் எஃகுச் சட்டகம் எனப் பொருத்தமாக அழைக்கப்படும் அவர்கள் அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதிலும், மக்களின் நலனுக்கும் நாட்டின் நலனுக்கும் பங்காற்றுவதிலும் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு அரசுப்பணி ஆற்றுகின்றனர்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.